# ஈழத்தவர் வரலாறு


## கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621ஆம் ஆண்டு வரை....

31


-செங்கை ஆழியான்-

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை அமைத்ததில், இரகுநாத மாப்பாண முதலியாருக்குரிய இடத்தை எவரும் மறுப்பதற்கு இல்லை. அதேபோன்று கிருஷ்ணையர் சுப்பையர் என்ற பிராமணருக்குரிய இடத்தையும் எவரும் மறுக்கவியலாது. ஆக இவ்விருவரும் கந்தவேள் சந்நிதியை மீண்டும் அமைப்பதில் ஈடுபட்டனர். கோயிலை மீளவும் அமைப்பதற்குரிய காணியில் முஸ்லிம்கள் குடியேறிருந்தனர். 'சோனகர் அதில் குடியிருந்தாற் கந்தசுவாமி கோவில் கட்ட வருங்காலத்தில் தடையாயிருக்கும் என்று நினைத்துத் தமிழர் கூடி அவர்களை அவ்விடத்தை விட்டு அப்புறப்படுத்தத் தெண்டித்துப் பார்த்தும் கூடாமற்போயிற்று. 'அந்த நிலங்களுக்கு அதிக விலை தருவோம். எங்களுக்கு விற்றுவிடுங்கள்' என்றுங் கேட்டுப் பார்த்தனர். சோனகர் அதற்குஞ் சம்மதிக்கவில்லை. யாதொரு இணக்கத்திற்குஞ் சோனகர் சம்மதியாது போனதினால், அந்தத் தமிழர் பண்ணாதிருப்பதற்கு ஒரு உடன்படிக்கையெழுதுவித்துக் கொண்டு கிடைத்த விலையையும் வாங்கிக் கொண்டு போய் நாவாந்துறைக்கு கிழக்குப் பக்கமாகக் குடியேறினார்கள்' என மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகின்றது.

முஸ்லிம்கள் 'நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிருக்குமிடத்து மேல்பாகத்திலே குடி கொண்டார்கள். அங்கே ஒரு பள்ளிவாசலும் கட்டினார்கள். பன்றியிறைச்சியைக் கொண்டு போய் தண்ணீர் குடிக்கும் கிணறுகளில் போடுவித்தார்கள்.



பன்றியிறைச்சியைக் கண்டவுடன் சோனகர் அழுது புலம்பிப் பசிபட்டினி கிடந்து ஆற்றாமல் ஈற்றில் தமிழருடனே தங்கள் பெருநாட்களில் வந்து சமய வழிபாடு செய்யத் தடை அப்பொழுது முன் இடிபட்ட கந்தசுவாமி கோயிலை மீளவுங் கட்டுவதற்கு தமிழர் முயன்று சோனகரை அவ்விடத்தினின்றும் நீக்கித் தருமாறு ஒல்லாந்த தேசாதிபதிக்கு விண்ணப்பஞ் செய்தார்கள். ஒல்லாந்த தேசாதிபதி அதற்கு அனுகூலஞ் செய்வதாகக் கூறியும் செய்யாது காலம் போக்கினான். அது கண்டு தமிழர் சோனகரை அவ்விடத்தை விடும்படி கேட்டும் இரந்தும் பார்த்தார்கள். முடிவில் அந்நிலத்துக்குப் பெருவிலை தருவதாயுங் கேட்டார்கள். அது கண்டு சோனகர் தங்கள் நிலத்தை விற்று விட்டு நாவாந்துறைக்கு கிழக்கேயுள்ள இடத்தை வாங்கிக்கொண்டு அங்கே குடியேறினார்கள்' என ஆ. முத்துத் தம்பிப்பிள்ளை தனது யாழ்ப்பாண சரித்திரத்தில் கூறி செல்வர்.



ஆகவே குருக்கள் வளவிலிருந்து வாழ்ந்த முஸ்லிம்கள் அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டதன் பின்னரே அவ்விடத்தில் கந்தசுவாமி கோயிலை நிறுவ முடிந்துள்ளது. வரலாற்றுக் குறிப்புக்களிலிருந்து நோக்கும் போது பொது மக்களிடமிருந்து ஆலயத் திருப்பணிக்காகச் சேகரிக்கப்பட்ட நிதியைக் கொண்டு கிருஷ்ணையர் சுப்பையர் நான்காவது தடவையாக கோயிலைக் கட்டுவித்தார். இக்கோயில் அவ்விடத்தில் அமைந்திருந்த யோகியாரின் சமாதிக்கு அருகில் நிறுவபட்டது. 'பின்பு அக்கோயிலைப் பெருப்பித்துக் கட்டும் பொழுது அங்கிருந்து இறந்து அடக்கம் பண்ணப்பட்ட ஒரு முஸ்லிம் பெரியாருடைய சமாதி அக்கோயில் உள்வீதிக்குள் அகப்பட்டபடியால் அதையிட்டு முஸ்லிம்கள் கலகம் செய்தனர். பின்பு கோயில் மேற்கு வீதியில் வாயில் வைத்துக் கொடுத்துச் சமாதியை அணுகி அவர்கள் வணங்கி வர இடங்கொடுத்ததால் கலகம் ஒருவாறு தணிந்தது. அதற்குச் சாட்சியாக அவ்வாயிற் கதவு இன்றுமிருப்பதும் அதனருகே வெளிப்புறம் பந்தரிட்டுச் சிலகாலத்தின் முன்வரை தொழுகை நடத்தி வந்ததும் இதனை வற்புறுத்தும். எனவே பொதுமக்களிடமிருந்து ஆலயத்திருப்பணிக்காகச் சேகரிக்கப்பட்ட நிதியினைக் கொண்டு (கிருஷ்ணையர்) சுப்பையர் என்ற பிராமணரால் ஆலயம் அமைக்கப்பட்டது. ஆலயத்தின் பிரதம குருவாக சுப்பையர் தெரிவானார். அவரின் கீழ் (இரகுநாத) மாப்பாண முதலியார் என்பவர் சுப்பையரோடு சேர்ந்து ஆலய பரிபாலனத்தை நடாத்த நியமனமானார். கிருஷ்ணையர் சுப்பையரே அக்கோயிலின் முதற் பூசகராக இருந்தார்.

இக்குறித்த பிராமணரும் (இரகுநாத) மாப்பாண முதலியார் என்பவர், சுப்பையரோடு சேர்ந்து ஆலய பரிபாலனத்தை நடாத்த நியமனமானார். கிருஷ்ணையர் சுப்பையரே அக்கோயிலின் முதற் பூசகராகவிருந்தார்.

இக்குறித்த பிராமணரும் (இரகுநாத) மாப்பாண முதலியாரும் ஆலய பரிபாலனத்தை மிகவும் சிறப்பாக எவ்வித வழுவுமின்றி மிகுந்த முன்னெச்சரிக்கையோடும் சமய ஆசாரத்தோடும் நடாத்தி வந்தார்கள்.

### இரகுநாத மாப்பாண முதலியார் சமூகா

தற்போதைய கந்தசுவாமி கோயிலின் தாபகர்களில் ஒருவரான கிருஷ்ணையர் சுப்பையர் ஆலயத்தின் பிரதம குருவாகச் தெரிவானதால் ஆலயக்கட்டிடத்தில் அவர் இடம் பெற முடியாது போனது. அதனால் அந்தக் கௌரவம் இரகுநாத மாப்பாண முதலியாருக்கு கிடைத்தது. திருவிழாக்காலங்களில் கந்தசுவாமி கோயிலின் ஒரு தாபகரகாகிய புவனேகபாகுவின் பெயரை முன்னும் இக்கோயிற்றாபகராக இரகுநாத மாப்பாண முதலியார் பெயரைப் பின்னும் கட்டியத்தில் கூறி வருகின்றார்கள். அக்கட்டியம் வருமாறு

'ஸ்ரீ மகான் மகாராஜாதிராஜ<br>அகண்ட பூ மண்டல<br>ரத்தியதிகிந்த விஸ்ராந்த கீர்த்தி<br>ஸ்ரீ கஜவல்லி மகாவல்லி<br>ஸமதே ஸ்ரீ சுப்ரிமண்ய<br>பாதாரவிந்த ஜனாதிருட<br>சிவகோத்திரோற்பவ ஹா<br>இரகுநாத மாப்பாண<br>முதலியார் சமூகா'

'நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மகா மண்டபத்துக்கு கீழைச் சுவரிலே மேற்குமுகமாக இக்கோயில் தாபகராகிய இரகுநாத மாப்பாண பிரதிமையும் அவர் மனைவி பிரதிமையும் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை இன்றும் பார்க்க முடியும்.

கோயில் கட்டியத்தில் இரகுநாத மாப்பாணரின் பெயர் இடம் பெற்றதால் அக்கோயில் தாபகர்களில் ஒருவரான கிருஷ்ணையர்சுப்பையரின் பெயர் உரிய கௌரவத்தைப் பெறாது போனது.

### ஆங்கிலேயர் காலம்

கி.பி.1798 ஆம் ஆண்டு யாழ்ப்பணவரசு ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் வந்தது. 'குடிகளும் தத்தமது வருணாசாரத்தையும் சமயாாரத்தையும் சுயேச்சையாக கைக்கொண்டொழுகுஞ் சுயாதீனம் ஆங்கிலவரசாற் கொடுக்கப்பட்டது. முன்னர் கோயில் போலாது, கொட்டில் போல இலைமறைவிற் கிடந்த கோயில்களெல்லாம் வெளிப்படத் தொடங்கின. இடிந்த கோயில்களை மீளக்கட்டிக்கொள்ளும்படி ஆங்கிலவரசு வந்தவுடன் அனுமதி கொடுக்கப்பட்டது. அக்காலவேளை நல்லூர் கந்தசுவாமி கோவில் அர்ச்சராக கிருஷ்ணையர் சுப்பையரின் பேரர் சுப்பையர் என்ற வாலசுப்பிரமணிய ஐயர் இருந்தார். ஆலயத்தர்மகர்த்தாவாக இரகுநாத மாப்பாண முதலியாரின் மகன் ஆறுமுக மாப்பாண முதலியார் இருந்தார். ஆங்கிலரசினர் சைவாலயங்களுக்கு அர்ச்சகர்களை நியமனஞ் செய்தார்.

(தொடரும்)